| | | | |
|---|---|---|---|
| Headline | TNB - Cheap quality mobile chargers are dangerous | | |
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 22 Apr 2016 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Page No | 1,13 |
| ArticleSize | 127 cm² | Journalist | N/A |
| PR Value | RM 2,814 | | |
| | | | |



# போலி சார்ஜர்களால் உயிருக்கே ஆபத்து

## எச்சரிக்கிறது டிஎன்பி

கோலாலம்பூர், ஏப். 22– கைப்பேசிகளுக்கு மின்னூட்டும்போது (சார்ஜிங்) போலி சார்ஜர் சாதனங்களைப் பயன்படுத்தினால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்று தெனாகா நேஷனல் மலேசியா (டிஎன்பி) நிறுவனம் எச்சரிக்கிறது.

அண்மையில் காவல்துறை அதிகாரி

13ஆம் பக்கம் பார்க்க

# போலி சார்ஜர்களால்...

முதல் பக்கத் தொடர்ச்சி...

ஒருவரின் மனைவி தன் கைப்பேசிக்கு மின்னூட்டும்போது திடீரென்று அந்தச் சாதனத்தில் மின்சாரம் பாய்ந்து மரணம் அடைந்தார்.

கைத்தொலைபேசி தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படாத மின்னூட்டுக் கருவியை (சார்ஜர்) பயன்படுத்தியதால்தான் இச்சம்பவம் நிகழ்ந்தது.

எனவே, பொதுமக்கள் தங்கள் கைப்பேசிகளுக்கு மின்னூட்டும்போது போலி சார்ஜர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். ஏனென்றால் போலி அல்லது பழுதடைந்த அந்த சார்ஜர்களில் இருந்து மின்கசிவு ஏற்படும் என்பதால் அதனைப் பயன்படுத்துவோருக்கு ஆபத்து ஏற்படலாம்.

அதேநேரத்தில் சிரிம்–எஸ்டி அல்லது எஸ்கேஎம்எம் குறியீடு உள்ள சார்ஜர்களை மட்டுமே சந்தையில் விற்க வேண்டும் என்றும் டிஎன்பி கேட்டுக் கொண்டது.

– வணக்கம் மலேசியா

Powered by: iSENTIA